கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| அ.சா.1 | | நாள் : 07.12.2022 |
| அமர்வு வழக்கு எண். | 149/2008 | |
| பெயர் | சந்திரா | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் மயிலாடுதுறை கொத்தந்தெருவில் வசிக்கிறேன். சாட்சி எத்திராஜ் எனது கணவர்.அவர் இறந்துவிட்டார். இந்த வழக்கின் வாதி ஜனார்த்தனன் 2003ம் வருடத்தில் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார். தற்போது அவர் எங்கு குடியிருக்கிறார் என்பது தெரியாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மயிலாடுதுறை தாலுக்கா அலுவலகம் முன்பாக வாதி ஜனார்த்தனன் என்பவரும், சேகர் என்பவரும் போய்க்கொண்டிருந்த போது அவர்களை போலிசார் அடித்து இழுத்துக் கொண்டு போனதாக கேள்விபட்டேன். அதற்கு 2 நாட்கள் கழித்து மாரியம்மன் கோவில் பூசாரியாகிய என் கணவர் சாமி ஊர்வலம் முடித்துவிட்டு வீட்டில் வந்து தூங்கியவரை இரவு 1 மணி அளவில் போலிசார் வந்து காவல் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்கள். என் கணவரை அவ்வாறு அழைத்துக் கொண்டு சென்றவர் ஆஜர் 1வது எதிரி மாதிரி தெரிகிறார். (சாட்சி எதிரிகளை பக்கத்தில் சென்று அடையாளம் பார்த்துவிட்டுவந்து அவ்வாறு கூறுகிறார்). பின்னர் என் கணவர் ஒரு காரின் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்திவிட்டதாக சொல்லி என் கணவர் மீது போலிசார் பொய்யாக ஒரு வழக்கை போட்டுவிட்டார்கள். மேலே கூறியவாறு மயிலாடுதுறை போலிசார் செய்தார்கள். பின்னர் என் கணவரை ஜாமீனில் எடுத்தோம். மாவட்ட ஆட்சியரிடம் இது குறித்து புகார் செய்தோம்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை

இந்த வழக்கு நடந்து கொண்டிருந்த போது தான் என் கணவர் இறந்தாரா என்றால் அவர் அண்மையில் தான் இறந்தார். மயிலாடுதுறை நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் என்னை விசாரிக்கவில்லை.

மறு விசாரணை

இல்லை.